செய்தி வெளியீடு எண். 384 நாள்.12 –05–2010.

**<u>நியாயவிலைக் கடைகளை நவீனமயமாக்க புதிய கட்டிடங்கள் கட்டும் பணியின் முன்னேற்றம் தொடர்பாக மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் ஆய்வு</u>**

சென்னை மாநகரில் நியாயவிலைக் கடைகளை நவீனமயமாக்க முதல் கட்டமாக 251 நியாயவிலைக் கடைகளுக்கு கட்டிடம் கட்டும் பணியின் முன்னேற்றம் தொடர்பாக இன்று (12.05.2010) தலைமை செயலகத்தில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் ஆய்வு நடத்தினார்கள்.

நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசிய பொருட்களை வாங்கச் செல்லும் பொதுமக்களுக்கு நவீன வசதிகளை அளிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு முதல் கட்டமாக 251 நியாயவிலைக் கடைகளுக்கு சொந்த கட்டிடங்களை கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி, நகராட்சிகள், பேருராட்சிகள், பஞ்சாயத்துகள், வீட்டுவசதி வாரியம், குடிசை மாற்று வாரியம், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல் வாரியம், இந்து அறநிலைத் துறை, ஆவின் மற்றும் வருவாய்த் துறை போன்ற அரசு துறைகளிடம் உள்ள இடங்களிலிருந்து புதிய கட்டிடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு இதுவரை 91 நிாயாயவிலைக் கடை கட்ட தேவையான இடங்கள் வழங்கப்பட்டு கட்டிடம் கட்டும் பணி துவக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதம் உள்ள 160 இடங்களை மே ‘2010 இறுதிக்குள் சம்மந்தப்பட்ட துறைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் அந்தந்த துறை அலுவலர்களிடம் கேட்டுக்கொண்டார்கள். சென்னை மாநகர மேயர் அவர்கள் மாநகர அலுவலர்களிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், விரைவில் தகுந்த இடம் வழங்கப்படும் என்றும் இதர துறை அலுவலர்களும் தகுந்த இடம் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் அவர்களும், திரு. க. சண்முகம், இ.ஆ.ப., முதன்மை செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. க. இராஜாராமன், இ.ஆ.ப., ஆணையர், உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, முனைவர். வீர சண்முக மணி, இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், மற்றும் இதர துறை அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,தலைமைச் செயலகம், சென்னை–9.